**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 5 PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்ரியா | Caste | |
| Husband Name | மாறன் | Calling | காவல் ஆய்வாளர் திருவாரூர் காவல் நிலையம் |
| Village | | Religion | |
| Taluk | | Age | 48/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of June 2026**

Signature of witness.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2025 ம் தேதி அன்று நாகப்பட்டினம் வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக வேளாங்கண்ணி காவல்நிலையத்திற்கும் பொறுப்பு வகித்து வந்தேன்.

2. வேளாங்கண்ணி காவல் நிலையத்தின் நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கு விசாரணை குறித்து ஆஜராகும் பெண் தலைமை காவலர் சங்கீதா வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண் 288/2022 இதச பிரிவு 147, 148, 449, 307, 302, 149, 120(B), 109, 202 வழக்கின் விசாரணை SC NO. 6/2023 என நடந்து வரும் வழக்கு விசாரணையின் போது 18.02.2025 ம் தேதி வழக்கின் விசாரணையின் போது அவ்வழக்கின் 2ம் எதிரி கிரேட்டன் (எ) ரோசரி கிரேட்டன் நீதிமன்றத்திற்கு ஆஜர் ஆகாமல் இருந்ததால் நீதிமன்றத்தால் ஜாமீனில்

வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த பிடியாணை 19.02.2025 நீதிமன்றத்தில் சங்கீதா பெற்றுக் கொண்டு பிடியாணை மற்றும் தனி அறிக்கையுடன் என்னிடம் நடவடிக்கை எடுக்கும்படி அளித்தார். தனிஅறிக்கை பெற்று கொண்ட நான் 20.02.2025 அன்று 19.00 மணிக்கு வேளாங்கண்ணி காவல் நிலைய குற்ற எண் 82/2025 ச/பிரவு 269 பி என் எஸ் ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.02.2025 அன்று மாவட்ட முதன்மை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிடியாணை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. முதல் தகவல் அறிக்கையை தனி அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததேன். இவ்வழக்கின் சாட்சிகள் லோகநாதன் மற்றும் சங்கீதா ரமேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வேளாங்கண்ணி காவல் நிலையத்திற்கு ஆய்வாளர் பணிக்கு சேர்ந்ததால் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக அவரிடம் ஒப்படைத்து விட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா. 3 ராதாகிருஷ்ணனை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வேளாங்கண்ணி காவல் நிலையத்திலிருந்து கீழ்வேளூர் நீதிமன்றம் எவ்வளவு தொலைவு என்றாலும் எவ்வளவு நேரத்தில் வரலாம் என்றாலும் சுமார் 15 கி.மீ. இருக்கும் முக்கால் மணி நேரத்தில் வரலாம். முதல் தகவல் அறிக்கையில் காலம் நம்பர் 3 ல் குற்ற நிகழ்வு நாள் 19.02.2025 18.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.02.2025 19.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. புகார் அளித்தவரின் கையொப்பம் காலம் 14 ல் பெறப்படவில்லை என்றால் சரிதான். காலம் நெ. 15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். கணிணியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்பொழுது தேதியும் நேரமும் குறிப்பிட்டு பதிவு செய்தாலும் நேரம் பொதுவாக பிரிண்ட் ஆவதில்லை. முதல் தகவல் அறிக்கை 24.02.2025 ம் தேதி காலை 10.30 நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். காலதாமதத்திற்கு குறிப்பிட்டு எந்த காரணமும் இல்லை என்றால் சரிதான். அதே கால கட்டத்தில் வேளாங்கண்ணி காவல்

நிலையத்தில் நீதிமன்றத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட பிடியாணை நிலுவை வழக்குகள் பல இருந்தது என்றால் சரிதான்.

3. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நாள், நேரம், விதத்தில் தனிஅறிக்கை பெறப்படவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை சொன்ன நாள், நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் வழக்கிற்கேற்ப பின்னால் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வாக்கில் எதிரி மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக சென்னைக்கு செல்ல இருந்ததால் தனது வழக்கறிஞரிடம் தெரிவித்து சென்றார் என்றும், அவரின் வழக்கறிஞருக்கு அவர் மீது இருந்த கோபத்தால் எதிரிக்கு தெரிவிக்காமல் அவருடைய வக்காலத்தை திரும்ப பெற்றுக் கொண்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. எதிரியின் மீது வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் NDPS வழக்கு மற்றும் Arms Act வழக்குகள் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 2 PW 4

| | | | |
|---|---|---|---|
| Name | லோகநாதன் | Caste | |
| Father's/Husband Name | முனியன் | Calling | சிறப்பு உதவி ஆய்வாளர் வேதாரண்யம் காவல் நிலையம் |
| Village | | Religion | |
| Taluk | | Age | 58/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **18th day of June 2026**

Signature of witness.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

1. நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2025 அன்று வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது நானும் தலைமை காவலர் ரமேஷ் அவர்களும் பணியில் இருந்தபோது அமர்வு நீதிமன்ற காவலர் சங்கீதா அவர்கள் SC No.6/2023 ல் 2ம் எதிரி கிரேட்டன் (எ) ரோசரி கிரேட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததால் அவர் மீது ஜாமீனில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக கூறினார்.

2. எனவே அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி தனி அறிக்கை அளித்தார். மேற்படி தனி அறிக்கையின் படி குற்ற எண் 82/2025 சட்டப்பிரிவு 269 BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி அமர்வு நீதிமன்ற வழக்கில் என்று நிபந்தனை ஜாமீன் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 18.02.2025 தேதியில் நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அ.சா. 1 எந்த தேதியில் தனி அறிக்கை அளித்தார் என்றால் 19.02.2025 ம் தேதியில் கொடுத்தார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை 20.02.2025 ம் தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. எதிரி மீது பிடிவாரண்ட் அமர்வு நீதிமன்றத்தில் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் 19.02.2025 ம் தேதி அ.சா. 1 வாங்கினார். சாட்சி தற்போது அ.சா. 1 18ம் தேதி வாரண்டை பெற்று 19ம் தேதி தனி அறிக்கை கொடுத்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார். ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 3 PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Caste | |
| Father's/Husband Name | ராமையன் | Calling | தலைமை காவலர் வேளாங்கண்ணி |
| Village | | Religion | |
| Taluk | | Age | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of June 2026**

Signature of witness.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**311 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் குறுக்கு விசாரணை**

1. எதிரி அமர்வு நீதிமன்ற வழக்கில் நிபந்தனை ஜாமீன் பெற்ற தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 18.02.2025 ம் தேதி நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்பது குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. எதிரி மீது பிடிவாரண்ட் எந்த தேதியில் பிறப்பிக்கப்பட்டது என்றால் 18.02.2025 தேதி ஆகும். அ.சா. 1 தனி அறிக்கையை எந்த தேதியில் எத்தனை மணிக்கு கொடுத்தார் என்றால் 19.02.2025 தேதி கொடுத்தார், நேரம் ஞாபகம் இல்லை. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் 20.02.2025 அன்று 18.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது.

2. காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 வாரண்டை நீதிமன்றத்தில் இருந்து எந்த தேதியில் பெற்றார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 1 PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | சங்கீதா | Caste | |
| Father's/Husband Name | மணிகண்டன் | Calling | பெண் காவலர் வேளாங்கண்ணி |
| Village | | Religion | |
| Taluk | | Age | 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969
(Central Act 44 of 1969) on the **18th day of June 2026**

Signature of witness.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**311 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் குறுக்கு விசாரணை**

1. எதிரி நிபந்தணை ஜாமீன் பெற்றது எந்த நாளில் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. 18.02.2025ம் தேதி நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் எதிரி ஆஜராகவில்லை என்றாலும் அந்த தேதியில் எதிரி மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டது என்றாலும் அன்றைய தேதியில் சாட்சி விசாரணை நடைபெற்றது என்றாலும் சரிதான். எதிரியின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சிகள் விசாரணை முடிந்த பிறகு எதிரியின்

சார்பாக தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வக்காலத்தை திரும்ப பெற்றுக் கொள்வதாக நீதிமன்றத்தில் தெரிவித்து சென்றார்.

2. பிடியாணை எந்த தேதியில் எதிரிமீது பிறப்பிக்கப்பட்டது என்றால் 18.02.2025 ஆகும். பொதுவாக எந்த காவல் நிலைய எல்லையில் குற்றம் நடைபெறுகிறதோ அந்த காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அங்கு தான் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் நாகப்பட்டினம் வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கு தொடர்பான தனி அறிக்கையை ( அ.சா. ஆ.1) எந்த தேதியில் அளித்தேன் என்றால் 19.02.2025 தேதியில் நீதிமன்றத்தில் வாரண்டை பெற்றுக் கொண்டு காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் மாலை 5.00 மணிக்கு பின்னர் நீதிமன்றத்திலிருந்து காவல் நிலையம் சென்று கொடுத்தேன்.

3. நான் வழக்கிற்கேற்ப பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்ட வழக்கில் 18.02.2025 தேதிக்கு அடுத்த வாய்தா தேதி தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.